# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.147/2024 | Date: 11.07.2025 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **சதாசிவம்** | |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணை :-**

1) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்ககதிகளை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது புகாரில் எதிரி என்னிடம் எவ்வளவு கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரூ.7,00,000/-ம் ஆகும். ரூ.7,00,000/-ம் தொகை எதிரியால் வெவ்வேறு தேதிகளில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 29-07-2022 ம்தேதி ரூ.2,00,000/-ம், 04-08-2022 ம் தேதி ரூ.2,00,000/-, 17-08-2022 ம் தேதி, ரூ.2,00,000/- மற்றும் 12-09-2022 ம் தேதியில் ரூ.2,00,000/-ம் என்று நான் எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் தவறுதலாக 12-09-2022 ம் தேதியில் ரூ.1,00,000/-ற்கு பதிலாக ரூ.2,00,000/-ம் என தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

2) 29-07-2022 ம் தேதி கொடுக்கப்பட்ட ரூ.2,00,000/-ம் தொகை திருப்பி தராதபோது மீண்டும் 04-08-2022 ம் தேதி ரூ.2,00,000/-ம் தொகை கொடுத்தாக கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுததததாக சொல்லப்படும் தொகை கடனாக கொடுத்தேனா என்றால் நான் கைமாற்றாக

கொடுத்தேன், ஆனால் எதிரி கடனாக வைத்துக்கொள்வதாக கூறினார். இதனை தான் நான் எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடன் கொடுத்த நான்கு தேதிகளுக்கும் பெரியதாக இடைவெளி இல்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை, பழக்கமானவர். நான்கு தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் தேதிகளில் எதிரியிடம் கடனுறுதி சீட்டுகளோ, காசோலையோ வாங்கவில்லை.

3) எதிரி என்னிடம் கடன் பெற்றதற்கு இவ்வழக்கு காசோலை தவிர வேறு என்னென்ன ஆவணங்கள் பெற்றேன் என்றால் ஒரு கடனுறுதி சீட்டு மற்றும் ஒரு காசோலை பெற்றேன். கடனுறுதி சீட்டு ஒருமுறை கொடுத்தார், அதன்பிறகு ஒரு காசோலை கொடுத்தார். அந்த காசோலை வசூலாகாமல் திரும்பியபோது வழக்கு காசோலை கொடுத்தார். கடனுறுதி சீட்டு கொடுத்தாக சொல்லும் தேதிக்கும், முதலாவதாக கொடுத்த காசோலைக்கு உள்ள தேதிக்கும் எவ்வளவு கால இடைவெளி என்றால் சரியாக ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டு கொடுத்தாக சொல்லும் தேதி, முதலாவதாக கொடுத்த காசோலையும் ஒரே தேதியில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

4) எதிரி கொடுத்த இரண்டு காசோலைகளையும் எந்த தேதியில் நிரப்பினேன் என்றால் நான் நிரப்பவில்லை எதிரி தான் நிரப்பினார். கடனுறுதி சீட்டை எழுதியவர் யார் என்றால் மகேந்திரன், த/பெ.பெரியசாமி, கருமாபுரத்தானூர், மொத்தையனூர் அஞ்சல், சங்ககிரி, சேலம். கடனுறுதி சீட்டின் சாட்சி யார் என்றால் பாலசுப்ரமணி, த/பெ.பெருமாள், படைவீடு, குமாரபாளையம், நாமக்கல் ஆவார். கடனுறுதி சீட்டு எழுதியவரையும், சாட்சியையும் நான் எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

5) எதிரி எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டை நான் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி, கடனுறுதி சீட்டு இன்று என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி, கடனுறுதி சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரி எனக்கு மேற்படி, கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தார் என்பதை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Sadasivam

Judicial Magistrate No.1,

Sankari.